Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்ககாலச் சிற்பங்கள் – ஓர் உளவியல் பார்வை

மா.மீரா & திரு. வீ. கோபிநாத்
உளவியல் துறை
மின்னஞ்சல் : 20bpy038@psgrkcw.ac.in, gobinath@psgrkcw.ac.in
பூ. சா. கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி,கோவை

9

**ஆய்வு நோக்கம்** :

சங்கம் வைத்து தமிழ் வளர்த்து நம்மை ஆட்சி செய்த மன்னர்கள் நம் வரலாற்றை மெருகேற்றிய காலத்தை சொற்களால் எழுத்துக்களால் மட்டுமல்ல கலைகளாலும் விவரிக்கலாம். அவ்வாறு உருவான கலைகளில் ஒன்றான சிற்பக்கலையில் எவ்வாறு உளவியல் கருத்துக்கள் பொதிந்துள்ளது என்பதை ஆய்வு செய்வதே இந்த ஆய்வு கட்டுரையின் நோக்கம்

**ஆய்வு சுருக்கம்** :

வரலாறு என்பது வாழுகின்ற காலத்தை வாழ்ந்த காலத்தோடு ஒப்பிட்டு பார்ப்பது. தமிழ் உலகத்தின் வேர்களின் வரலாற்றில் முக்கிய அத்தியாயம் தான் சங்ககாலம். சங்கம் வைத்து தேமதுரத்தமிழை மன்னர்கள் மெருகேற்றிய காலம் அது. சொற்களால் எழுத்துக்களால் மட்டுமல்ல கலைகளாலும் தமிழை திக்கட்டும் பரவச் செய்தனர். அதில் நாம் சிற்பக்கலையின் தனித்துவத்தையும் மேன்மையும் அறிய வேண்டிய தருணம் இது. தமிழ் உலக வரலாற்றின் பொற்காலமான சங்க காலத்தில் உருவான சிற்பங்கள் பற்றிய ஆய்வுதான் இது. ஒரு சிற்பியால் சிலை வடிக்கப்படுகிறது என்றால் அதில் சிற்பியின் உளி மட்டும் பேசவில்லை, அவரது எண்ணங்கள் அவர்கள் வாழும் காலம் மற்றும் இடத்தின் மேன்மைகள் மற்றும் பல்வேறு கலாச்சாரக்கூறுகள் அதில் புதைந்திருக்கும். அவ்வாறு சங்க காலத்தில் உருவான சிற்பங்களில் தற்காலத்தில் வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றான உளவியல் சார் நுணுக்கங்கள் எவ்வாறு புதைந்துள்ளன என்பதை இக்கட்டுரை வாயிலாக ஆய்வு செய்துள்ளோம்.

**திறவுச் சொற்கள்** :

1. திருநாவுக்கரசர் – திருவதிகை வீரட்டானம் பதிகம் – கலை சிகிச்சை
2. திருநாவுக்கரசர் – சிதம்பரம் பதிகம் - கலை என்னும் சிகிச்சை
3. ஆமை சிற்பங்கள் – இந்திய மற்றும் ஆன்மீக உளவியல்

**முன்னுரை** :

***"கலை ஒரு ஆன்மா, மற்றொரு ஆன்மாவுடன் உரையாடும் சங்கேத மொழியாகும். - ரஸ்கின் பாண்ட்"***

கலை என்பது அளவும் பொருத்தமும் தன்னுள் அடக்கி நிற்பது; அதே நேரத்தில் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது; உள்ளத்தைத் தன்பால் ஈர்ப்பது, மனிதனது உள்ளத்தைத் தன் வயமாக்கி, நிரம்பி, அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படும் ஆற்றலே 'கலை' என்பது என்று மா. இராச மாணிக்கனார் கூறுகிறார். கலையாற்றல் உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படலாம், கண்ணைக் கவரும்

ஓவியமாக வெளிப்படலாம். சிற்பமாக உருக் கொள்ளலாம், கண்ணையும் கருத்தையும் தன்பால் ஈர்க்கும் அழகிய கட்டமாக வெளிப்படலாம்.

**சங்ககால சிற்பங்கள்:**

மனிதனின் ஒவ்வொரு அசைவும் ஒவ்வோர் கலையாக உருவெடுக்கிறது. அதன் விளைவாக மாந்தரின் வாழ்வில் பல வகையான கலைகள் வளர்ந்தன.அவற்றுள் சிற்பக்கலை சிறப்புவாய்ந்தது. சிற்பங்கள் செதுக்குவதையும், சிற்பங்களிலும் வெளிப்படும் அழகியலையும் மரபையும் நுட்பங்களையும் சிறந்த சிற்பக்கலை குறிக்கும். இக்கலை பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழரால் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மண், மரம், தந்தம், கல் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன.

***கலை, மழையைப் போன்றது. வானத்தில் இருந்து நிலத்தில் விழும்வரை அதில் பேதம் இல்லை. ஆனால் அது எந்த நிலத்தில் விழுகிறதோ அதைப் பொறுத்து அதன் தன்மை மாறுகிறது. அது போலத்தான் கலையும்.***

- ***எம். ஜி. இராமச்சந்திரன்.***

**திருவதிகை வீரட்டானம் பதிகம் கூறம் சிற்பக்கலை சார் உளவியல்** :

மருள்நீக்கியார் என்ற தர்மசேனரை கொடிய சூலை நோய் தாக்குகிறது. சூலை நோயின் கொடுமை தாங்க முடியாமல் தன்னுடைய தமக்கை இருக்கும் திருவதிகை சென்று முறையிடுகிறார். தம்பி துன்பப்படுவதை கண்ட திலகவதி திருவதிகை இறைவனிடம் அழைத்துச் சென்று அங்குள்ள திருநீற்றை அவருக்கு பூசி இறைவனைப் பார்த்து அவர் மேல் மனம் உருகி பாடச் சொல்கிறார். அவரும்

***கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே – திருமுறை( 4)- திருவதிகை வீரட்டானம் பதிகம்***

என்ற பாடலுடன் தொடங்கும் பதிகத்தை பாடி சூலை நோய் நீங்கப் பெற்றார். திருநாவுக்கரசர் என்று சிவபெருமான் சூட்டிய திருநாமத்துடன் சைவ சமயத்துக்கு பெரும் தொண்டு செய்ய தொடங்கினார் அவர். தனது சூலை நோய் நீங்கப் பாடிய பதிகமே இவர் பாடிய முதல் பதிகம் ஆகும்.



Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இவ்வாறு கி.பி 1003-ல் தொடங்கப்பட்டு கி.பி 1009-ல் நிறைவுபெற்ற இக்கோயிலின் சிவபெருமானின் தரிசனம் பெற்று நோய் நீங்கிய வரலாற்றின் சாரத்தைத்தான் தற்கால உளவியலில் "கலை சிகிச்சை" என்கிறோம்.

**கலை சிகிச்சை :**

கலை சிகிச்சை என்பது காட்சிக்கலை ஊடகத்தின் மூலம் ஆக்கப்பூர்வமான வெளிப்பாடு முறைகளை உள்ளடக்கிய ஒரு தனித்துவமான துறையாகும். கலை சிகிச்சையானது மக்கள் தங்களை மிகவும் சுதந்திரமாக வெளிப்படுத்தவும், மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தனிப்பட்ட உறவுகளை மேம்படுத்தவும் உதவும். கலை சிகிச்சையின் அடிப்படையானது கலை வெளிப்பாடு மூலம் மக்கள் நோய்களில் இருந்து குணமடையலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டது. சுய உணர்ச்சிகளை ஆராய்வதற்கும், ஒரு நபரின் உள் மன மோதல்கள் அல்லது அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் உணர்வுகளைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் கலையைப் பயன்படுத்துவதற்கு கலை சிகிச்சையாளர்கள் பணிகளை மேற்கொள்வர்.

***உயர்ந்த கலைகள் அனைத்தும் கடவுளின் வேலையில் மனிதனுக்குரிய மகிழ்ச்சியை வெளிக் காட்டுகின்றன. - ரஸ்கின் பாண்ட்***

*இங்கு சூலை நோயால் மனதால் உடம்பால் துன்பப்பட்ட திருநாவுக்கரசர், சிவ பெருமானை சிலை வடிவத்தில் பார்த்து பதிகம் பாடி உணர்வுகளை வெளிக்கொணர்ந்து கலை சிகிச்சை மூலம் துன்பம் நீங்கப் பெற்றார்.*

**தேவாரம் கூறும் தெய்வசிற்பம் மூலம் கலை என்னும் சிகிச்சை** :

பன்னிரு திருமுறைகளில் திருநாவுக்கரசர் பாடிய நான்காம் திருமுறை சிவபெருமானின் அம்சங்களை விவரிக்கிறது. மனம் உருகி சைவக் கடவுளை சித்தரித்துள்ளார்.

***குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்***
***பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்***
***இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்***
***மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே. – திருமுறை( 4)-***
***சிதம்பரம் பதிகம்***

*தமிழண்ணல் குறிப்பிடுகிறார், " குனித்த புருவமும்" என்ற திருநாவுக்கரசரின் இந்த பாடல்,* திரேதாயுகத்தில் 17,000-மாவது ஆண்டு *கட்டப்பட்ட சிதம்பரம் தில்லை நடராசர்* கோயில் *சிற்பத்தினால் உந்துதல் பெற்றது தான்.*



**கலை என்னும் சிகிச்சை :**

பிரச்சனைகளுக்கு தீர்வு காண கலையை பயன்படுத்துவது ஒரு வகை கலை சிகிச்சை என்றால், ஒரு கலை மூலம் இன்பத்தைப் பெருக்க, அந்த கலையின் அம்சத்தை ஆராய்ந்து வெளிப்படுத்துவது இன்னோர் வகை கலை சிகிச்சை.

*இங்கு சிற்பக்கலை என்ற கலையின் அம்சத்தை விவரிக்க கவிபாடல் என்ற கலையை உபயோகித்து தன் சுய உணர்வுகளை பா மூலம் விவரித்து கலை என்னும் சிகிச்சை கொண்டு அகம் மகிழ்கிறார் திருநாவுக்கரசர்.*

***<u>ஆமை அம்சத்தின் பின் இருக்கும் அறிவியல்(உளவியல்):</u>***

நமது ஆலயங்களில் ஆமையின் வடிவம் ஏன் ? ஆமை நமக்கு புகட்டும் பாடம் என்ன? நாம் ஆலயங்களுக்கு வழிபாட்டுக்குச் செல்லும் போது நம் கண்களில் ஆமையின் சிற்பங்கள் கட்டாயம் படும். ஆமைகள் இன்னுமும் பல சந்தேகங்களுக்கு விடை சொல்ல முடியாத ஒரு உயிரினம் ஆயிரம் ஆண்டுகள் உயிர் வாழக்கூடிய உயிரினம் என சொல்லப்படுவதுண்டு. கோவில்களில் காணப்படும் ஆமை உருவங்களை பார்க்கும் போதெல்லாம் அந்த உருவங்களின் மூலமாக மனிதனுக்கு ஞானத்தை போதிக்கும் தன்மையை விளங்கிக் கொள்ள முடிகிறது.

***ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல் ஆற்றின்***
***எழுமையும் ஏமாப் புடைத்து – திருக்குறள் : அடக்கமுடைமை (126).***

ஒரு பிறவியில் ஒருவன் ஆமை போல் ஐம்பொறிகளையும் அடக்கி வாழ கற்றுக் கொண்டால் அந்த அடக்கம் அவன் எடுக்கும் ஏழு பிறவிகளுக்கும் பாதுகாவலாக அமையும் என்பது திருவள்ளுவரின் கூற்றாகும் .

அதுமட்டுமல்லாது ஆமையும் விசித்திரமான நடத்தை என்னவென்றால் முட்டைகளை இட்டுவிட்டு கடலுக்குள் சென்று விடும் ஆனால் சிந்தனை முழுவதும் முட்டைகளின் மீது இருக்கும் அதுபோல ஆன்மீக சாதகன் ஒருவன் திருக்கோவிலை விட்டு புறத்தே சென்று விட்டாலும் தான் கண்டு இன்புற்ற பரம்பொருளை நினைப்பிலேயே இருத்த வேண்டும் என்பது ஆமை நமக்கு கற்றுத்தரும் பாடமாகும்.

**ஆமை சிற்பமும் ஆன்மீக உளவியலும் :**

ஆமை சிற்பம் கற்றுத்தரும் பாடத்தை நாம் இந்திய உளவியலின் அம்சமான ஆன்மீக

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

உளவியலும் விவரிக்கிறது. இந்திய உளவியலின் படி, வாழ்க்கையின் இறுதி நோக்கம் ஆழ்நிலை நிலையை அடைவதாகும். உயர் நிலைகளை அடைவதற்கான தனித்துவமான விழிப்புணர்வை உணர சம்சாரக்கடலில் வாழும் நம் உணர்வுநிலையிலிருந்து விழிப்புணர்வு படிப்படியாக குறைந்து, நனவின் பொருளில்( அதாவது உண்மையின் இருப்பிடமான பரம்பொருள்) மனதை முழுமையாகக் கவனிக்க வைக்க வேண்டும். அது தான் வாழ்வின் இலட்சியமாக இருக்க




வேண்டும்.

***தெய்விகப் படைப்பின் நிழல்தான் உண்மையான கலைப் படைப்பு. - மைக்கேல் ஏஞ்சலோ***

*ஆமை சிற்பம் கூறும் உள்ளார்த்தமும் உளவியலும் பரம்பொருள் மீது விழிப்புணர்வை முழுமையாக அமைக்கப் பெற வேண்டும் என்பதுதான்.*

**முடிவுரை** :

நிறைவாக சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தம் மன்னர்கள் தமிழுடன் ஆயக்கலைகள் அறுபத்து நான்கினையும் அயராது பாடுபட்டு வளர்த்துவந்துள்ளனர். அதில் சிற்பக்கலைக்கு அவர்கள் அளித்த முக்கியத்தவம் சொற்களால் விவரிக்கப் படவேண்டியதல்ல, சான்றுகளாக சிற்பங்கள் இன்றளவும் நிலைத்து நிற்கிறது. அவை தமிழர் கலையின் வெளிப்பாடு மட்டுமல்ல அவர்கள் அறிவியல் அறிவு, வாழ்வியல் நெறிகளை விவரிக்கிறது. இத்தகு சிறப்புமிக்க கலையில் உளவியல் நுணுக்கங்கள் நிச்சயம் இருக்கக்கூடும் என்ற கணிப்பில் உருவான இந்த ஆய்வு மூலம், சிற்பங்களில் உளவியல் பற்றி தமிழ் கூறும் நல் உலகிற்கு அறிமுகம் செய்ய சிறு முயற்சி செய்துள்ளோம்.

**மேற்கோள்கள்** :

- கலை ஒரு ஆன்மா, மற்றொரு ஆன்மாவுடன் உரையாடும் சங்கேத மொழியாகும். - ரஸ்கின் பாண்ட்
- கலை, மழையைப் போன்றது. வானத்தில் இருந்து நிலத்தில் விழும்வரை அதில் பேதம் இல்லை. ஆனால் அது எந்த நிலத்தில் விழுகிறதோ அதைப் பொறுத்து அதன் தன்மை மாறுகிறது. அது போலத்தான் கலையும். - எம். ஜி. இராமச்சந்திரன்
- உயர்ந்த கலைகள் அனைத்தும் கடவுளின் வேலையில் மனிதனுக்குரிய மகிழ்ச்சியை வெளிக்

காட்டுகின்றன. - ரஸ்கின் பாண்ட்

- தெய்விகப் படைப்பின் நிழல்தான் உண்மையான கலைப் படைப்பு. - மைக்கேல் ஏஞ்சலோ

**துணை நூற்பட்டியல்** :


1. சூலை நோய்(வயிற்று வலி) நீங்க அருள் புரியும் திருவதிகை(2016)- என்.எஸ்.நாராயணசாமி
2. தேவாரம் – திருநாவுக்கரசர்- திருமுறை : 4; பதிகம் : திருவதிகை வீரட்டானம்.
3. திருவதிகை கற்சிலைகள்(2014)- மு.இளங்கோவன்
4. Healing through art(2020) – Art therapy- American psychiatric association
5. தேவாரம் – திருநாவுக்கரசர் - திருமுறை : 4; பதிகம் : சிதம்பரம்
6. தில்லை அம்பல நடராஜா, செழுமை நாதனே பரமேசா(2022)
7. Healing through art(2020) – Art as therapy- American psychiatric association
8. நமது ஆலையங்களில் ஆமையின் வடிவம் ஏன்?(2020)
9. திருக்குறள் – திருவள்ளுவர்- பால் : அறத்துப்பால்; இயல் : இல்லறவியல்; அதிகாரம் : அடக்கமுடைமை; குறள் எண் : 126
10. Psychology in the Indian Tradition – K. Ramakrishna Rao & Anand C. Paranjpe(2016) ; pg. No : 16.
11. மேற்கோள்கள் : Tamil Wikipedia (https://ta.m.wikiquote.org/wiki/%E0%AE%95%E0%AE%B2%E0%AF%88)